Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.264/2021 Date:20.03.2025
Deposition of witness for prosecution: PW1 ( LW1 )
Defence:
Court:

| Name | திருமதி. அன்னமயில் | Caste | |
|---|---|---|---|
| Father/ Husband Name | சுப்பையா | Calling | விவசாயம் |
| Village | சுருளிபட்டி | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 48 /2024 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 18.03.2025 TIME

எதிரி சிறையில் இருந்து ஆஜர் படுத்தப்பட்டார். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

கடந்த 13.01.2019–ம் தேதி இரவு 08.10 மணியளவில் நான், சுபலதா, நதியா, வசந்தி ஆகியோர் பத்திரிக்கை கொடுக்க சுருளிபட்டி கறி கடை சந்து வழியாக நடந்து சென்று கொண்டிருந்த போது, வேகமாக ஒரு பைக் வந்ததை பார்த்து நான் பயந்து ஒதுங்கினேன். நான் போட்டுருந்த 5 பவுன் கோதுமை தங்க செயினை என் கழுத்தில் இருந்து அத்துவிட்டு ஓடினார். ஆஜர் எதிரி தான் என்னுடைய செயினை அத்துவிட்டு சென்றார். பின்னர் நான் சத்தம் போட்டு கத்தினேன். துரத்தி ஓடினோம் எதிரி கருப்பு கலர் பைக்கில் கம்பம் செல்லும் சாலையில் சென்றுவிட்டார். அதன் பிறகு நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அதன் பின்னர் சுமார் 1 மாதம் கழித்து 10–ம் தேதி எதிரியை பிடித்து வைத்திருந்தார்கள் என்னை அழைத்து காண்பித்தார்கள் நான் அடையாளம் செய்தேன். செயினை நீதிமன்றம் மூலம் மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஜெயின் என்னுடையது தான். புகைப்படத்தில் உள்ள பைக் எதிரி ஓட்டி வந்த பைக். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகைப்படம் அ.சா.ஆ.2 (எண்ணிக்கை–2) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல மற்றொரு நபர் எழுதினார். செயின் கிடைத்தாக எத்தனை மணிக்கு தகவல்கிடைத்தது என்றால் இராயப்பன்பட்டி காவல்நிலையத்தில் இருந்து, 12.00 மணியளவில் தகவல் வந்தது. செயின் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. சம்பவ நடந்த நேரம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். வெளிச்சம் இருந்தது. சம்பவத்தின் போது கழுத்தில் காயம் ஏற்பட்டது. சாட்சி சுரேஷ், மாயாண்டி என்னுடைய உறவினர் என்றால் சரியல்ல. எதிரியை போலிசார் சொல்லி தான் தெரியும். இதுபோன்ற செயின் கடையில் வாங்கலாம் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு

விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு.எ.இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.